முருகப்பெருமான் துணை

**மகான் பத்ரகிரியார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.07.2023**, புதன்கிழமை

1. ஞானியைப் போல் உலகோர்
ஞானம் கண்டுத் தேறிட
கனிவேலவனும் படைத்த அவதாரம்
கலியினில் அரங்கமகானப்பா
2. அப்பனே உன் பெருமை தனை
அறிவால் அறிந்துத் தெளிவாரே
காப்பாக ஞானமடைவாரெனக் கூறி
கண்டுரைப்பேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை சோபகிருது நள்ளிதிங்கள்
அறிவிக்க தச திகதி புந்தி வாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 10 ம் நாள், 26.07.2023, புதன்கிழமை)
வாசிவென்ற பத்ரகிரியார் யானும்
வருங்காலம் ஞானிகள் படை
4. படைகள் பெருகும் சூழலாக
பாமரருக்கும் ஞானமருளி
தடைகளை போக்கிக் காக்கும்
தவராஜன் சேவை பெருக இருக்க
5. இருக்கவே கலிவாழ் மக்கள்
இனிதே பிரணவக் குடிலதை
கருத்தாக நாடிவந்து மாற்றம்
கண்டுத்தேற அரங்கனிடம்
6. அரங்கனிடம் தீட்சை அடைந்து
ஆற்றல்பட ஞான வாழ்வை
வரங்களாகத் தா என வேண்டி
வலம்வந்து சேவை கலந்து

7. கலந்துமே செயல்பாடுகளை
கண்ணியமுறச் செய்து வர
பலம் தந்து வாழும் காலமே
பக்குவங்கள் கூடி சிறந்து
8. சிறந்து தன் நிலைகளதை
சிறப்பறிவால் கடந்து நன்கு
அறந்தனில் நிலை நிறுத்தி
ஆபத்தை காலனை வெல்லும்
9. வெல்லும் பலம் வரமாக
வேலவன் துணைபட அடைந்து
எல்லாக் காலமும் அறிந்துமே
எவ்வுயிரையும் தன்னுயிராக போற்றி
10. போற்றி மதித்து சேவைதனை
பேருலகம் எங்கும் ஆற்றி
ஆற்றல் மிக்க ஞானப்படை
அகிலம் முழுமையும் கண்டிட
11. கண்டிட பேரானந்த நிலை
கலியும் மாறி ஞானயுகமாக
உண்டாகும் ஞான ஆட்சிபலம்
உரைத்திட்ட அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–